**இனிமையான குழந்தைகளே! பிராமணர்களாகிய நாம் குடுமி போன்றவர்கள், புருஷோத்தமர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பதை சதா நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தனக்குள் உரையாடல் செய்யக் கற்றுக் கொண்டால் அளவற்ற குஷி ஏற்படும்.**

கேள்வி: தந்தையின் சரணத்தில் (அடைக்கலத்தில்) யார் வர முடியும்? தந்தை யாருக்கு சரணம் (அடைக்கலம்) கொடுக்கிறார்?

பதில்: யார் முழுமையிலும் முழுமையாக நஷ்டமோகாவாக இருக்கிறார்களோ அவர்கள் தான் தந்தையின் அடைக்கலத்தில் வர முடியும். யாருடைய புத்தியோகம் அனைத்திலிருந்தும் துண்டிக் கப்பட்டிருக்கிறதோ, உற்றார் உறவினர்கள் போன்றவர்களிடமிருந்து புத்தி விடுபட்டிருக்கிறதோ! எனக்கு ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை என்று புத்தியில் இருக்க வேண்டும். இப்படிப் பட்ட குழந்தைகள் தான் சேவை செய்ய முடியும். தந்தை இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுக்கிறார்.

ஓம்சாந்தி. இவர் ஆன்மீகத் தந்தை, ஆசிரியர், குருவாக இருக்கிறார். இதை குழந்தைகள் நல்ல முறையில் புரிந்திருக்கின்றனர். உலகத்தினர் இந்த விசயங்களை அறியவில்லை. சிவோஹம் என்று சந்நியாசிகள் கூறிக் கொள்ளலாம். இருப்பினும் நான் தந்தையாக, ஆசிரியராக, குருவாக இருக்கிறேன் என்று கூற முடியாது. அவர்கள் சிவோஹம், தத்தத்துவம் என்று மட்டுமே கூறு கின்றனர். பரமாத்மா சர்வவியாபி எனில் ஒவ்வொரு வரும் தந்தை, ஆசிரியர், குருவாக ஆகி விடுவர். இவ்வாறு யாரும் புரிந்து கொள்வதும் கிடையாது. மனிதர்கள் தங்களை பகவான், பரமாத்மா என்று கூறிக் கொள்வது என்பது முற்றிலும் தவறானது ஆகும். குழந்தைகளுக்கு தந்தை புரிய வைக்கின்றார் எனில், புத்தியில் தாரணை ஆகிறது அல்லவா! அந்த படிப்புகளில் எவ்வளவு பாடங்கள் உள்ளன! அனைத்து பாடங்களும் மாணவர்களின் புத்தியில் இருக்கும் என்று கூற முடியாது. இங்கு தந்தை என்ன படிப்பு கற்பிக்கின்றாரோ அது ஒரு விநாடியில் குழந்தைகளின் புத்தியில் வந்து விடுகிறது. படைப்பவர் மற்றும் படைப்பின் முதல், இடை, கடையின் ஞானத்தை நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் தான் திரிகாலதர்சி மற்றும் சுயதரிசன சக்கரதாரிகளாக ஆகிறீர்கள். அந்த உலகீய படிப்பில் பாடங்கள் முற்றிலும் தனிப்பட்டது. அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒரு தந்தை தான் என்பதை நீங்கள் நிரூபணம் செய்து புரிய வைக்க முடியும். அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவை நினைவு செய்கின்றன. ஓ இறை தந்தையே! என்று கூறுகின்றனர். ஆக கண்டிப்பாக தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைத்திருக்க வேண்டும். அந்த ஆஸ்தியை இழப்பதனால் துக்கத்தில் வந்து விடுகிறீர்கள். இது சுகம் துக்கத்திற்கான விளை யாட்டாகும். இந்த நேரத்தில் அனைவரும் பதீதமாக, துக்கமானவர்களாக இருக்கின்றனர். தூய்மை ஆவதன் மூலம் அவசியம் சுகம் கிடைக்கும். சுகமான உலகை தந்தை ஸ்தாபனை செய்கிறார். நமக்கு தந்தை புரிய வைக்கின்றார், ஞானம் நிறைந்தவர் ஒரே ஒரு தந்தை தான் என்பதை குழந்தைகள் புத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். சிருஷ்டி யின் முதல், இடை, கடையின் ஞானத்தை தந்தை தான் கொடுக்கிறார். ஸ்தாபனை ஆகியிருக்கும் மற்ற அனைத்து தர்மத்தினரும் அவரவர்களது நேரத்தில் வருவார்கள். இந்த விசயம்

வேறு யாருடைய புத்தியிலும் கிடையாது. குழந்தைகளாகிய உங்களுக்காக தந்தை இந்த படிப்பை முற்றிலும் எளிதாக ஆக்கி விட்டார். சிறிது விஸ்தாரத்தில் புரிய வைக்கின்றார், அவ்வளவு தான். தந்தையாகிய என்னை நினைவு செய்தால் நீங்கள் தமோபிரதானத்திலிருந்து சதோபிரதானமாக ஆகிவிடுவீர்கள். யோகாவிற்கு அதிக மகிமை இருக்கிறது. பாரதத்தின் பழமையான யோகா என்று பாடப்பட்டிருக்கிறது. ஆனால் யோகாவின் மூலம் என்ன லாபம் கிடைத்தது? என்பது யாருக்கும் தெரியாது. இது கீதையின் அதே யோகா ஆகும், இதை நிராகார பகவான் கற்பிக்கின்றார். மற்ற அனைத்தையும் கற்றுக் கொடுப்பவர்கள் மனிதர்கள் ஆவர், தேவதைகளிடம் யோகாவிற்கான விசயமே கிடையாது. அந்த ஹடயோகா போன்றவைகளை மனிதர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். தேவதைகள் கற்றுக் கொள்வதும் கிடையாது, கற்றுக் கொடுப்பதும் கிடையாது. தெய்வீக உலகில் யோகாவிற்கான விசயமே கிடையாது. யோகாவின் மூலம் அனைவரும் பாவனம் ஆகிவிடுகின்றனர். அவர்கள் கண்டிப்பாக இங்கு தான் ஆகின்றனர். சங்கமத்தில் புது உலகை உருவாக்குவதற்காகவே தந்தை வருகின்றார். இப்பொழுது நீங்கள் பழைய உலகிலிருந்து புது உலகிற்கு மாற்றலாகிக் கொண்டிருக்கிறீர்கள். இதை மற்றவர்களுக்குப் புரிய வைப்பதும் ஆச்சரியமான விசயமாகும். பிராமணர்களாகிய நாம் குடுமி போன்றவர்கள், சத்யுகம் மற்றும் கலியுகத்தின் நடுவில் குடுமி போன்ற பிராமணர்களாக இருக்கிறோம். இது தான் சங்கமயுகம் என்று கூறப்படுகிறது. இதில் நீங்கள் புருஷோத்தமர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். நாம் புருஷோத்தமர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பது குழந்தைகளின் புத்தியில் இருந்தால் சதா மகிழ்ச்சியாக இருப்பீர்கள். எந்த அளவிற்கு சேவை செய்வீர்களோ அந்த அளவிற்கு மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வருமானம் செய்ய வேண்டும் மற்றும் செய்விக்க வேண்டும். கண்காட்சிகளில் சேவை செய்கின்ற பொழுது கேட்பவர்களுக்கும் சுகம் கிடைக்கும். தனக்கு மற்றும் மற்றவர்களுக்கும் நன்மை ஏற்படும். சிறிய சென்டர்களிலும் முக்கியமான சித்திரங்கள் 5-6 இருக்க வேண்டும். அதை வைத்துப் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். முழு நாளும் சேவையோ சேவை தான். உற்றார் உறவினர்களின் மீது எந்த பற்றுதலும் இருக்கக் கூடாது. எதை இந்த கண்களினால் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ அவையனைத்தும் விநாசம் ஆகிவிடும். மற்றபடி எதை திவ்ய திருஷ்டியினால் பார்க்கிறீர்களோ அது ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு தனக்குள் உரையாடல் செய்யும் பொழுது நீங்கள் பக்காவாக ஆகிவிடுவீர்கள். எல்லையற்ற தந்தையை சந்திக்கும் குஷி இருக்க வேண்டும். யாராவது இராஜா விடம் பிறப்பு எடுத்திருக்கின்றனர் எனில் எவ்வளவு போதையுடன் இருப்பர்! குழந்தை களாகிய நீங்கள் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் தனக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். காமச்சிதையில் அமர்ந்து நீங்கள் கருப்பாகி விட்டீர்கள் என்று தந்தை கூறுகின்றார். இப்பொழுது ஞானச் சிதையில் அமர்ந்தால் வெள்ளையாக ஆகிவிடு வீர்கள். புத்தியில் இதே சிந்தனை நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அலுவலகத்தில் காரியம் செய்து கொண்டிருந்தாலும் நினைவு செய்து கொண்டே இருங்கள். நேரமில்லை என்று இருந்து விடக் கூடாது. எவ்வளவு நேரம் கிடைக்குமோ ஆன்மீக வருமானம் செய்யுங்கள். எவ்வளவு உயர்ந்த வருமானம் ஆகும் இது! ஆரோக்கியம், செல்வம் இரண்டும் ஒன்றாகக் கிடைக் கிறது. அர்ஜுனன் மற்றும் ஏகலைவன் கதை இருக்கிறது அல்லவா!

இவ்வாறு இல்லறத்தில் இருந்து கொண்டே ஞான யோகத்தில் சென்டரில் இருப்பவர்களை விட வேகமாகச் செல்ல முடியும். அனைத்திற்கும் ஆதாரம் நினைவில் தான் இருக்கிறது. இங்கு அனைவரும் அமர்ந்து விட்டால் சேவை எப்படி செய்வீர்கள்! புத்துணர்வு அடைந்து சேவையில் ஈடுபட்டு விட வேண்டும். சேவைக்கான எண்ணம் இருக்க வேண்டும். பாபா கண்காட்சிகளுக்கு செல்ல முடியாது. ஏனெனில் பாப்தாதா இருவரும் சேர்ந்து இருக்கின்றனர். பாபாவின் ஆத்மா மற்றும் இவரது ஆத்மா சேர்ந்து இருக்கிறது. இது அதிசயமான யுகல் (ஜோடி) ஆகும். இந்த யுகலை குழந்தைகளாகிய உங்களைத் தவிர வேறு யாரும் அறிந்து கொள்ள முடியாது. தன்னை யுகல் என்று புரிந்து கொண்டாலும் நான் பாபாவின் ஒரே ஒரு செல்லமான குழந்தை என்று கூறுகிறார். இந்த லெட்சுமி நாராயணரின் சித்திரத்தைப் பார்த்து அதிக மகிழ்ச்சி அடைந்தார். எனது அடுத்த பிறப்பு இவ்வாறு இருக்கும், நான் சிம்மாசனத்தில் அமர்வேன். நீங்களும் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இலட்சியம் எதிரில் இருக்கிறது. நான் பாபாவின் செல்லமான குழந்தை என்ற குஷி இவரிடம் இருந்தது. இருப்பினும் நினைவு சதா நிலைத்திருப்பது கிடையாது. மற்ற விசயங்களில் சிந்தனைகள் சென்று விடுகின்றன. வேறு எந்த எண்ணங்களும் வராமல் முற்றிலுமாக நினைவில் நிலைத்து விடுவது என்பது நாடகத்தில் சட்டம் கிடையாது. மாயையின் புயல்கள் நினைவு செய்ய விடுவது கிடையாது. எனக்கு எளிதானது தான் என்பதை அறிவேன், ஏனெனில் பாபாவின் பிரவேசம் இருக்கிறது. பாபாவின் நம்பர் ஒன் செல்லமான குழந்தை. முதல் நம்பரில் இராஜகுமாரனாக ஆவேன், இருப்பினும் நினைவு மறந்து விடுகிறது. பலவிதமான எண்ணங்கள் வந்து விடுகின்றன. இது தான் மாயை ஆகும். எப்பொழுது இந்த பாபாவிற்கு அனுபவம் ஏற்படுகிறதோ அப்பொழுது தான் குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்க முடியும். இந்த எண்ணங்கள் அனைத்தும் கர்மாதீத் நிலை அடையும் பொழுது நின்று விடும். ஆத்மா சம்பூர்ணம் ஆகிவிட்டால் பிறகு இந்த சரீரம் இருக்காது. சிவபாபா எப்பொழுது தூய்மையானவர் ஆவார். பதீத உலகம் மற்றும் பதீத சரீரத்தில் வந்து பாவனம் ஆக்கும் நடிப்பும் இவருடையது ஆகும். நாடகத்தில் கட்டுப்பட்டு இருக் கிறார். நீங்கள் பாவனம் ஆகிவிட்டால் பிறகு புது சரீரம் தேவை. சிவபாபாவிற்கு தனக்கென்று சரீரம் கிடையாது. இந்த உடலில் இந்த ஆத்மாவிற்கு மகத்துவம் இருக்கிறது. அவருக்கென்று என்ன இருக்கிறது? அவர் முரளி கூறி விட்டு சென்று விடுகிறார். அவர் சுதந்திரமாக இருக்கிறார். சில நேரங்களில் அங்கும், இங்குமாக சென்று விடுகிறார். சிவபாபா முரளி நடத்திக் கொண்டி ருக்கிறார் என்று குழந்தைகளும் உணர முடிகிறது. தந்தைக்கு உதவி செய்வதற்காக இந்த இறை சேவையில் இருக்கிறோம் என்பதை குழந்தைகளாகிய நாம் புரிந்திருக்கிறோம். தந்தை கூறுகிறார் - நானும் எனது இனிய வீட்டை விடுத்து வந்திருக்கிறேன். பரந்தாமம் என்றால் வெகு தூரத்தில் இருக்கும் இடமாகும். மற்றபடி விளையாட்டு அனைத்தும் சிருஷ்டியில் நடைபெறுகிறது. இது அதிசயமான விளையாட்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். மற்றபடி உலகம் ஒன்று தான்.

அவர்கள் சந்திர மண்டலம் செல்வதற்கு முயற்சி செய்கின்றனர். இது விஞ்ஞானத்தின் பலமாகும். அமைதி சக்தியின் மூலம் நாம் அனைவரும் விஞ்ஞானத்தின் மீது வெற்றி அடைகிறோம். அதனால் தான் விஞ்ஞானமும் சுகம் கொடுக்கக் கூடியதாக ஆகிவிடுகிறது. இங்கு விஞ்ஞானம் சுகமும்

கொடுக்கிறது, துக்கமும் கொடுக்கிறது. அங்கு சுகமே சுகம் தான். துக்கத்தின் பெயர் கிடையாது. இப்படிப்பட்ட விசயங்கள் முழு நாளும் புத்தியில் இருக்க வேண்டும். பாபாவிற்கு எவ்வளவு சிந்தனைகள் இருக்கின்றன! பந்தனமுள்ளவர்கள் (காம) விஷத்திற்காக எவ்வளவு அடி வாங்குகின்றனர்! சிலர் மோகத்திற்கு வசமாகி பிறகு அதிலேயே மாட்டிக் கொள்கின்றனர். நிச்சய புத்தியுடையவர்கள் நாம் அமிர்தம் குடிக்க வேண்டும் என்று உடனேயே கூறுவார்கள். இதில் முழுமையாக நஷ்டமோகா ஆக வேண்டும். பழைய உலகிலிருந்து புத்தி நீங்கி விட வேண்டும். இவ்வாறு சேவை செய்பவர்கள் தான் உள்ளத்தில் அமர முடியும். அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார். கன்னியா பதியின் சரணத்தில் செல்கிறார், விஷமின்றி இருக்க முடிவது கிடையாது. பிறகு தந்தையின் அடைக்கலத்தில் வர வேண்டியிருக்கிறது. ஆனால் முற்றிலும் நஷ்டமோகா ஆக வேண்டும். பதிகளுக்கெல்லாம் பதி கிடைத்திருக்கிறார், இப்பொழுது நாம் அவரிடம் புத்தி யோகத்தின் திருமணம் செய்கிறோம். எனக்கு ஒருவரைத் தவிர வேறு யாருமில்லை, அவ்வளவு தான். எவ்வாறு கன்னியாவிற்கு பதியிடம் அன்பு ஏற்பட்டு விடுகிறதோ, அது போன்று இங்கு ஆத்மாவின் அன்பு பரமாத்மாவிடம் ஏற்படுகிறது. அவரிடமிருந்து துக்கம் கிடைக்கும், இவரிட மிருந்து சுகம் கிடைக்கிறது. இது சங்கமமாகும், இதை யாரும் அறியவில்லை. உங்களுங்கு எவ்வளவு சுகம் இருக்க வேண்டும்! நமக்கு படகோட்டி அதாவது தோட்டக்காரன் கிடைத்திருக் கிறார், அவர் நம்மை மலர் நிறைந்த தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறார். இந்த நேரத்தில் அனைத்து மனிதர்களும் முள் போன்று ஆகிவிட்டனர். அனைத்தையும் விட பெரிய முள் காமம் ஆகும். முதலில் நீங்கள் விகாரமற்ற மலர்களாக இருந்தீர்கள். சிறிது சிறிதாக கலைகள் குறைந்து விட்டன, இப்பொழுது பெரிய முள்ளாக ஆகிவிட்டீர்கள். பாபாவை பபூல்நாத் என்றும் கூறு கின்றனர். உண்மையான பெயர் சிவன் என்பது உங்களுக்குத் தெரியும். பபூல்நாத் என்று பெயர் வைத்திருக்கின்றனர், ஏனெனில் முட்களை மலர்களாக ஆக்குகின்றார். பக்தி மார்க்கத்தில் பல பெயர்கள் வைத்திருக்கின்றனர். உண்மையில் ஒரே ஒரு பெயர் தான், சிவன். ருத்ர ஞான யக்ஞம் அல்லது சிவ ஞான யக்ஞம் விசயம் ஒன்று தான். ருத்ர யக்ஞத்தின் மூலம் விநாச நெருப்பு உருவானது மற்றும் ஸ்ரீ கிருஷ்ணபுரி அதாவது ஆதி சநாதன தேவி தேவதா தர்மம் ஸ்தாபனை ஆனது. நீங்கள் இந்த யக்ஞத்தின் மூலம் மனிதனிலிருந்து தேவதைகளாக ஆகிறீர்கள். அதிசய மான சித்திரங்களும் உருவாக்குகின்றனர். விஷ்ணுவின் நாபியிலிருந்து பிரம்மா வெளிப்பட்டார். இவையனைத்து விசயங்களையும் நீங்கள் அறிவீர்கள், பிரம்மா சரஸ்வதி தான் லெட்சுமி நாராயணர் ஆகின்றனர். இந்த நம்பிக்கை இருக்கிறது. லெட்சுமி நாராயணர் தான் 84 பிறவி களுக்குப் பிறகு பிரம்மா சரஸ்வதி ஆகின்றனர். மனிதர்கள் இந்த மாதிரியான விசயங்களைக் கேட்டு ஆச்சரியப்படுவர். குஷியடைவர். ஆனால் மாயையும் குறைந்தது கிடையாது. நான் பலருக்கு புரிய வைக்கிறேன் என்பதில் மட்டுமே குஷியடைந்து விடாதீர்கள். பாபாவை எவ்வளவு நினைவு செய்கிறேன்? என்பதை முதலில் பார்க்க வேண்டும். இரவு பாபாவை நினைத்து விட்டு தூங்குகிறேனா? அல்லது மறந்து விடுகிறேனா? சில குழந்தைகள் பக்கா நியமத்துடன் நடக்கின்றனர்.

குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். தந்தையிடத்தில் அதிக சுமை இருக்கின்றன. இருப்பினும் ரதத்திற்கு கமிஷன் கிடைத்து விடுகிறது. ஞானம் மற்றும் யோகாவும் இருக்கிறது. இவை யில்லாமல் லெட்சுமி

நாராயணர் பதவி எப்படி அடைவர்? குஷி இருக்கவே செய்கிறது, நான் தந்தையின் ஒரே ஒரு குழந்தை, பிறகு எனக்கு பல குழந்தைகள் உள்ளனர். இந்த போதையும் இருக்கிறது, கூடவே மாயை தடைகளும் போடுகிறது. குழந்தைகளுக்கும் மாயையின் தடைகள் வந்து கொண்டிருக்கும். நாளடைவில் கர்மாதீத் நிலை ஏற்படும். இங்கு பாப்தாதா இருவரும் இருக்கின்றனர். இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! ...... என்று கூறுகின்றனர். தந்தை அன்புக் கடலாக இருக்கின்றார். இவரது ஆத்மா சேர்ந்திருக்கிறது. இவரும் அன்பு செலுத்துகிறார். நான் என்ன காரியம் செய்கிறேனோ என்னைப் பார்த்து தான் மற்றவர்களும் செய்வார்கள் என்று நினைக்கிறார். மிக இனிமையானவர்களாக இருக்க வேண்டும். குழந்தைகள் மிகத் திறமையானவர் களாக இருக்க வேண்டும். இந்த லெட்சுமி நாராயணனிடம் பாருங்கள் எவ்வளவு திறமை இருக்கிறது! திறமையினால் உலக இராஜ்யம் அடைகின்றனர்! கண்காட்சியின் மூலம் பல பிரஜை கள் உருவாகின்றனர். பாரதம் மிகப்பெரியது, அந்த அளவிற்கு சேவை செய்ய வேண்டும். மற்றொன்று நினைவில் இருந்து விகர்மங்களையும் விநாசம் செய்ய வேண்டும். இது மிகப் பெரிய கவலையாகும். நாம் தமோ பிரதானத்திலிருந்து சதோபிரதானம் ஆவது எப்படி? இதில் உழைப்பு இருக்கிறது. சேவைக்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது. புகைவண்டியில் பேட்ஜ் மூலம் சேவை செய்ய முடியும். இவர் பாபா, இது ஆஸ்தி. சரியாக 5 ஆயிரம் ஆண்டிற்கு முன்பு பாரதம் சொர்க்கமாக இருந்தது. லெட்சுமி நாராயணனின் இராஜ்யம் இருந்தது. பிறகு மீண்டும் இவர்களது இராஜ்யம் வர வேண்டும். நாம் பாபாவின் நினைவின் மூலம் பாவன உலகிற்கு எஜமானர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம். புகைவண்டியில் அதிக சேவை செய்ய முடியும். ஒரு பெட்டியில் சேவை செய்து முடிந்ததும் மற்றொன்றில் செல்ல வேண்டும். இவ்வாறு சேவை செய்பவர்கள் தான் உள்ளத்தில் அமர முடியும். நாம் உங்களுக்கு குஷியான விசயங்களைக் கூறுகிறோம் என்று சொல்லுங்கள். நீங்கள் பூஜ்ய தேவதைகளாக இருந்தீர்கள், பிறகு 84 பிறவிகள் எடுத்து பூஜாரி ஆகிவிட்டீர்கள். இப்பொழுது மீண்டும் பூஜ்ய நிலை அடையுங்கள். ஏணிப்படி நன்றாக இருக்கிறது, இதன் மூலம் சதோ, ரஜோ, தமோவை நிரூபிக்க வேண்டும். பள்ளிக் கூடங்களில் கடைசியில் அதிக கவனம் செலுத்தலாம் என்பதில் ஆர்வம் இருக்கும். இங்கும் யார் நேரத்தை வீணாக்கியிருக் கிறார்களோ அவர்கள் அதிக கவனம் செலுத்தி சேவையில் ஈடுபட வேண்டும் என்று புரிய வைக்கப்படுகிறது. சேவைக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. சேவாதாரி குழந்தைகள் பலர் வெளிப்பட வேண்டும். அவர்களை பாபா எங்கு வேண்டுமானாலும் அனுப்புவார். கோயில்களில் சேவை நன்றாக ஏற்படும். தேவதா தர்மத்தைச் சார்ந்தவர்கள் உடனேயே புரிந்து கொள்வர். கங்கைக் கரையிலும் நீங்கள் புரிய வைக்க முடியும். அவசியம் உள்ளத்தில் பதியும். நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) சதா மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஆன்மீக சேவை செய்ய வேண்டும், உண்மையான வருமானம் செய்ய வேண்டும் மற்றும் செய்விக்க வேண்டும். தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். புகைவண்டியிலும்

பேட்ஜ் மூலம் சேவை செய்ய வேண்டும்.

2) பழைய உலகிலிருந்து உள்ளத்தை நீக்கி விட வேண்டும். நஷ்டமோகா ஆக வேண்டும். ஒரு தந்தையின் மீது உண்மையான அன்பு வைக்க வேண்டும்.

வரதானம் : சங்கமயுகத்தின் மகத்துவத்தை அறிந்து ஒவ்வொரு நேரமும் விசேசமான கவனம் செலுத்தக் கூடிய ஹீரோ பார்ட்தாரி ஆகுங்கள்.

நான் ஹீரோ பார்ட்தாரியாக இருக்கிறேன், என்ற வரதானம் ஒவ்வொரு கர்மமும் செய்யும் போது நினைவில் இருந்தால்.. ஒவ்வொரு கர்மமும் விசேசமாக இருக்கும்., ஒவ்வொரு விநாடி நேரமும், சங்கல்பமும் உயர்வாக இருக்கும். 5 நிமிடங்கள் தான் சாதாரணமாக ஆகி விட்டது என்று சொல்ல முடியாது. சங்கமயுகத்தின் 5நிமிட நேரம் கூட மிகவும் மதிப்பு வாய்ந்தது. 5 நிமிடங்கள், 5 வருடங்களை விட உயர்ந்ததாகும். ஆகவே, ஒவ்வொரு நேரமும் இந்தளவு கவனம் செலுத்த வேண்டும். சதா கால இராஜ்ஜிய பாக்கியத்தை பெற வேண்டு மானால், சதா காலத்திற்கு கவனம் செலுத்த வேண்டும்.

சுலோகன்: யாருடைய சங்கல்பத்தில் உறுதியான தன்மை இருக்கிறதோ, அவர்களுக்கு ஒவ்வொரு காரியமும் சாத்தியமாக (சாதகமாக) இருக்கும்.